திரு. எம்.கே. அசோக்: மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 416, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

416—

நியாய விலைக் கடை

*__2384—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:__

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அச்சம்பாடு ஊராட்சி, மடப்புரம் கீழூர், மேலூர் மற்றும் இந்திரா காலனி ஆகிய பகுதிகளில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அச்சம்பாடு ஊராட்சியில், மடப்புரம் கீழூர், மேலூர் மற்றும் இந்திரா காலனி ஆகிய பகுதிகளில் நியாய விலை கிளைக் கடைகள் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள்கூட கேட்கின்ற கோரிக்கைகளை எல்லாம், 'இல்லை' என்று சொல்லாமல், அள்ளித் தருகின்ற நாளைய பாரதம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) வணங்குகிறேன். எனது ராதாபுரம்

2013 மே 7]

தொகுதி சிறு, சிறு கிராமங்கள் நிறைந்த பகுதி ஆகும். அங்குள்ள மக்களெல்லாம் கூலித் தொழிலாளிகள். எனவே, அவர்கள் கூலித் தொழில் செய்து வருகின்ற நேரங்களில் அவர்களுக்கு அருகில் நியாய விலைக் கடைகள் இல்லாத காரணத்தினால், அவர்களால் அந்தப் பொருட்களை வாங்க முடியாத நிலை இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து மேற்படி கிராமங்களில் நியாய விலைக் கடைகள் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மைக்கேல் ராயப்பன் அவர்கள் கேட்டவுடன் கொடுக்க வேண்டுமென்கிற எண்ணம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கு நிரம்ப இருக்கிறது. அதற்கு வேறொன்றும் காரணம் கிடையாது. அவர்களுடைய தொகுதியிலேதான் கூடங்குளமும் வருகிறது. கூடங்குளம் பகுதி மக்களுடைய மேம்பாட்டிற்காகவும், பாதுகாப்பிற்காகவும் பல்வேறு திட்டங்களை அறிவித்து, அதனைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற அந்தப் பகுதியில், ஏற்கெனவே ஒரு தாய்க் கடையிலிருந்து இரண்டு பகுதிநேரக் கடைகள் பிரிக்கப்பட்டுள்ளன. இரண்டு பகுதிநேரக் கடைகள்தான் ஒரு தாய்க் கடையிலிருந்து பிரிக்க முடியும் என்கிற விதி இருப்பதனால், மூன்றாவதாக ஒரு கடையைப் பிரிப்பதற்கு வாய்ப்பு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கேட்டிருக்கிற மேற்படி கிராமங்களில் மிகவும் குறைவான குடும்ப அட்டைகளே இருக்கின்றன. மடப்புரம் மற்றும் கீழூர் ஆகிய கிராமங்களில் 42 குடும்ப அட்டைகளும், மேலூர் கிராமத்தில் 41 குடும்ப அட்டைகளும், இந்திரா காலனி கிராமத்தில் 27 குடும்ப அட்டைகளும்தான் இருக்கின்றன. எனவே, இதற்கு தனித் தனியாக கடைகள் அமைக்க முடியாது என்கிற நிலையில், இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து மாவட்ட வழங்கல் அலுவலர் அவர்களிடத்தில் கருத்துரு பெற்று, எல்லாவற்றையும்

சேர்த்து ஒரே இடத்திலே கடை அமைப்பற்கு மூன்றாவது கடை நிரந்தர கடையாக ஆக்கப்படவேண்டும். அதுமாதிரியான வாய்ப்புகள் இருக்கும்பட்சத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலேயும் கருத்துரு பெற்று, நிச்சயமாக அந்தக் கடையை அமைத்துத் தருவதற்கான நடவடிக்கையினை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.*

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மூன்று ஊருக்கும் சேர்த்துத்தான் ஒரு நியாய விலைக் கடை கேட்டிருக்கின்றோம். அதேமாதிரி, குமாரபுரம் பஞ்சாயத்தில், அந்தோணியார்புரம் என்ற கிராமத்தில் நியாய விலைக் கடை அமைப்பதற்காக 20–7–2011 அன்று உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் அவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். ஆனால், இதுவரையிலும் அந்தக் கடை அமைக்கப்படவில்லை. அதையும் உடனடியாக அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள் இந்த மூன்று கிராமங்களையும் இணைத்துத்தான் தனியாகக் கடை அமைக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறேன் என்று சொன்னார்கள். மூன்று கடைகளை இணைத்தாலும் குடும்ப அட்டைகள் குறைவாக இருக்கின்றன என்பதைத்தான் நான் முதலிலே பதிலாகச் சொன்னேன். அதுமட்டுமல்லாமல், குமாரபுரத்திற்கு அருகில் ஒரு கடை திறக்கவேண்டுமென்று கடிதம் அனுப்பியிருப்பதாகச் சொன்னார்கள். அதனையும் பரிசீலித்து, ஆய்வு செய்து, அந்தக் கடையையும் திறப்பதற்கான ஏற்பாடுகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்பதனை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 மே 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் காலம்தான் தமிழகத்திற்குப் பொற்காலம் என்பதனை நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலும் குறிப்பாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்பொழுதெல்லாம் ஆட்சிக்கு வருகிறார்களோ, அப்பொழுதெல்லாம் சாதாரண மக்கள், ஏழையெளியவர்கள் பாதுகாக்கப்படுகிறார்கள். அந்தவகையிலேதான் பொது விநியோகத் திட்டம், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வருகிறபோதெல்லாம் செம்மைப்படுத்தப்படுகிறது. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் உரியவர்களுக்கு பொருள் கிடைப்பதற்கும், சரியான எடையோடு பொருள் கிடைப்பதற்கும், குறித்த காலத்திலே கிடைப்பதற்கும் உறுதி செய்வது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்கிற அடிப்படையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள் கேட்டுக்கொண்ட கோரிக்கைகளையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்பதனை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 417, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

417—

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம்

***21324—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் உள்ள நலிவடைந்த பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை சீரமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?